சாராம்சம்: இனிய குழந்தைகளே, தந்தையை மாத்திரம் உங்களுடைய புத்தியினால் தொடர்ந்தும் நினைவுசெய்ய முடியுமானால், அதுவே உங்களுடைய மாபெரும் பாக்கியமாகும்.

கேள்வி: சேவை செய்வதில் ஆர்வமுடைய குழந்தைகளின் அடையாளங்கள் என்ன?

பதில்: அவர்களால் இந்த ஞானத்தைக் கூறாமலிருக்க முடியாது. அவர்கள் தங்களது எலும்புகளையும் ஆன்மீகச் சேவைக்கு அர்ப்பணிக்கின்றார்கள். இந்த ஆன்மீக ஞானத்தை விளங்கப்படுத்துவதில் அவர்கள் அதிகளவு சந்தோஷத்தைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்தும் சந்தோஷத்தில் நடனமாடுகிறார்கள். தங்கள் மூத்தவர்களிடம் அவர்கள் பெருமளவு மரியாதை வைத்திருப்பதுடன், தொடர்ந்தும் அவர்களிடம் இருந்து கற்றுக் கொள்கிறார்கள்.

பாடல்: உலகம் மாறினாலும், நாம் ஒருபொழுதும் உங்களிடம் இருந்து பிரிய மாட்டோம்.

ஓம்சாந்தி. குழந்தைகளாகிய நீங்கள் பாடலின் இரு வரிகளைக் கேட்டீர்கள். இது சத்தியம் செய்வது பற்றிய பாடலாகும். இது தாங்கள் ஒருபொழுதும் ஒருவரையொருவர் விட்டுப் பிரிய மாட்டோம் என்று நிச்சயம் செய்யப்பட்ட தம்பதிகள் சத்தியம் செய்வது போன்றதாகும். சிலர் ஒருவருடன் ஒருவர் தொடர்ந்து வாழ முடியாததால் பிரிகின்றார்கள். குழந்தைகளாகிய நீங்கள் இங்கே யாருக்குச் சத்தியம் செய்கின்றீர்கள்? கடவுளுக்கே; குழந்தைகளாகிய நீங்கள், மணவாட்டிகளாகிய நீங்கள் யாருக்கு நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறீர்களோ, அவருக்கே சத்தியம் செய்கின்றீர்கள். எவ்வாறாயினும், உங்களை உலக அதிபதிகள் ஆக்குகின்ற ஒரேயொருவரை நீங்களும் விட்டுச் செல்கிறீர்கள். இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் இங்கே அமர்ந்திருக்கும் பொழுது எல்லையற்ற பாப்தாதா வர இருக்கின்றார் என்பதைப் புரிந்து கொள்கின்றீர்கள். உங்களுக்கு இங்கே இருக்கும் ஸ்திதியைப் போன்று வெளியில் உங்கள் நிலையங்களில் நீங்கள் அதே ஸ்திதியைக் கொண்டிருக்க முடியாது. இங்கே பாப்தாதா வரவுள்ளார் என்பதை நீங்கள் புரிந்து கொள்கின்றீர்கள். வெளியில் உங்கள் நிலையங்களில் நீங்கள் பாபா பேசியுள்ள முரளியைச் செவிமடுக்க இருக்கின்றீர்கள் என்பதைப் புரிந்து கொள்கின்றீர்கள். இங்கே இருப்பதற்கும், அங்கே இருப்பதற்கும் இடையில் பெருமளவு வித்தியாசம் உள்ளது, ஏனெனில் இங்கே நீங்கள் எல்லையற்ற பாப்தாதாவிற்கு முன்னால் நேரடியாக இருக்கின்றீர்கள். அங்கே நீங்கள் பாபாவுக்கு முன்னால் இருப்பதில்லை. ஆனால் வந்து, முரளியை நேரடியே தனிப்பட்ட முறையில் செவிமடுப்பதற்கான விருப்பம் உங்களுக்கு உள்ளது. மற்றைய ஆன்மீக ஒன்றுகூடலில் அவர்களுடைய சுவாமி (ஆசிரியர்) வர இருக்கின்றார் என அவர்கள் புரிந்து கொள்வதைப் போன்று, இங்கே பாபா வர இருக்கின்றார் என்பதைக் குழந்தைகளாகிய உங்களுடைய புத்தி அறிந்து கொள்கின்றது. எவ்வாறாயினும், அனைவருமே ஒரே எண்ணத்தைக் கொண்டிருப்பதில்லை. சிலருடைய புத்தியின் யோகம் வேறெங்கோ அலைந்து கொண்டிருக்கும். சிலர்

தங்களுடைய கணவன்மாரையும், சிலர் தங்கள் உறவினர்களையும் நினைவு செய்வார்கள். அவர்களின் புத்தியின் யோகம் ஒரு குருவின் மீது ஒருமுகப்படுவதில்லை. அரிதாகவே எவராலும் சுவாமியின் நினைவில் நிலைத்திருக்க முடிகின்றது. இங்கும் அதேபோன்றதே. நீங்கள் அனைவரும் சிவபாபாவின் நினைவில் நிலைத்திருக்கின்றீர்கள் என்றில்லை. அவர்களின் புத்தி வேறு எங்கோ ஓடிக்கொண்டிருக்கிறது; உறவினர்கள் போன்றோர் நினைவு செய்யப்படுவார்கள். உங்களால் சிவபாபாவின் நினைவில் சதா நிலைத்திருக்க முடியுமானால், நீங்கள் மாபெரும் பாக்கியசாலிகள். அரிதாக வெகு சிலராலேயே சதா நினைவில் நிலைத்திருக்க முடிகின்றது. தந்தையின் முன்னிலையில் இருக்கும் பொழுது, நீங்கள் பெருமளவு சந்தோஷத்தைக் கொண்டிருக்க வேண்டும். “அதீந்திரிய சுகம் பற்றிக் கோபி வல்லபவரின் (கோபிகைகளினதும் கோபியரினதும் தந்தை) கோபிகைகளிடமும் கோபியரிடம் கேளுங்கள்” என்ற கூற்று இந்த நேரத்தையிட்டே நினைவு கூரப்படுகின்றது. நீங்கள் இங்கே தந்தையின் நினைவில் அமர்ந்திருக்கின்றீர்கள். நீங்கள் இப்பொழுது இறைவனின் மடியில் இருக்கின்றீர்கள் எனவும், பின்னர் தேவர்களின் மடியில் இருப்பீர்கள் எனவும் புரிந்து கொள்கின்றீர்கள். சில குழந்தைகள் ஒரு படத்தில் எவ்வாறு திருத்தத்தைச் செய்வது அல்லது அதில் என்ன எழுதுவது என்ற சேவைக்கான எண்ணங்களையே தங்களது புத்தியில் கொண்டிருக்கின்றார்கள். எவ்வாறாயினும், தாங்கள் இப்பொழுது தந்தை கூறுவதைச் செவிமடுக்க வேண்டும் என்பதை நல்ல குழந்தைகள் புரிந்து கொள்கின்றார்கள். அவர்கள் வேறு எந்த எண்ணங்களையும் வெளிப்படுத்த அனுமதிப்பதில்லை. தந்தை உங்களின் புத்திகளை இந்த ஞான இரத்தினங்களால் நிரப்புவதற்கு வந்துள்ளார். ஆகையினால், நீங்கள் உங்களின் புத்தியின் யோகத்தைத் தந்தையுடன் வைத்திருக்க வேண்டும். இதைக் கிரகிப்பதில் அனைவரும் வரிசைக்கிரமமானவர்கள். சிலர் நன்றாகச் செவிமடுத்து அதைக் கிரகிக்கின்றார்கள், ஆனால் மற்றவர்களோ, குறைந்தளவே கிரகிக்கின்றனர். அவர்களின் புத்தியின் யோகம் வேறெங்கோ இருந்தால், அப்பொழுது அவர்கள் முரளியைக் கிரகிப்பது சாத்தியமல்ல, அவர்கள் பலவீனமாக இருக்கிறார்கள். நீங்கள் ஒன்று அல்லது இரண்டு தடவை முரளியைக் கேட்ட பின்னர் கிரகிக்காமல் விட்டால், அந்தப் பழக்கம் உறுதியாகி விடுகின்றது. பின்னர், நீங்கள் எந்தளவிற்குச் செவிமடுத்தாலும், உங்களால் கிரகிக்க முடியாதிருக்கும். உங்களால் இந்த ஞானத்தை மற்றவர்களுக்குக் கூறவும் முடியாதிருக்கும். இதைக் கிரகிப்பவர்கள், சேவை செய்வதில் ஆர்வம் உடையவர்களாக இருப்பார்கள்; அவர்கள் மிகவும் உற்சாகம் அடைகின்றார்கள். தாங்கள் சென்று செல்வத்தைத் தானஞ் செய்ய வேண்டும் எனச் சிந்திக்கின்றார்கள், ஏனெனில் வேறு எவரிடமும் அன்றி, தந்தையிடமே இந்தச் செல்வம் உள்ளது. அனைவராலும் இதைக் கிரகிக்க முடியாது எனவும், அனைவராலும் அதே உயர்ந்த அந்தஸ்தைக் கோர முடியாது எனத் தந்தையும் புரிந்து கொள்கின்றார். இதனாலேயே அவர்களின் புத்தி தொடர்ந்தும் எங்கோ அலைகின்றது. அவர்களின் எதிர்காலப் பாக்கியம் மேன்மையாக இருக்க மாட்டாது. சிலர் பௌதீகச் சேவை செய்வதில் தங்களது எலும்புகளையும் அர்ப்பணிக்கின்றனர்; அவர்கள் அனைவரையும் சந்தோஷம் அடையச் செய்கின்றனர். உதாரணமாக அவர்கள் சமைத்து, மக்களுக்கு உணவு பரிமாறுகின்றனர். அதுவும் ஒரு பாடமாகும். சேவை செய்வதில் ஆர்வம் உடையவர்களால் இந்த ஞானத்தைக் கூறாமல் இருக்க முடியாது. பின்னர்

பாபா, அவர்கள் சரீர உணர்வைக் கொண்டிருக்கின்றார்களா எனப் பார்க்கின்றார். அவர்கள் மூத்தவர்களிடம் மரியாதை வைத்திருக்கிறார்களா, இல்லையா? மூத்த மகாராத்திகள் மீது நீங்கள் மரியாதை வைத்திருக்க வேண்டும். ஆம், சில இளம் திறமைசாலிகளின் புத்தி விரைவாக முன்னேறிச் செல்லும் பொழுது, மகாராத்திகள் அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். நீங்கள் சேவை செய்வதில் ஆர்வம் உடையவர்களாக இருப்பதைப் பார்க்கும் பொழுது, தந்தை மகிழ்ச்சி அடைகின்றார்: இவர் மிக நல்ல சேவை செய்வார். நீங்கள் கண்காட்சிகளில் விளங்கப்படுத்துவதற்கு நாள் முழுவதும் பயிற்சி செய்ய வேண்டும். பெருமளவு பிரஜைகளும் உருவாக்கப்படுவார்கள். வேறெந்த வழியும் இல்லை. சூரிய, சந்திர வம்ச அரசர்களும், அரசிகளும், பிரஜைகள் அனைவரும் இங்கேயே உருவாக்கப்படுகின்றார்கள். நீங்கள் அதிகளவு சேவை செய்ய வேண்டும். நீங்கள் இப்பொழுது பிராமணர்கள் ஆகியுள்ளீர்கள் என்பது குழந்தைகளாகிய உங்கள் புத்தியில் உள்ளது. வீட்டில் உங்கள் குடும்பத்துடன் வாழும் பொழுது, நீங்கள் உங்கள் சொந்த ஸ்திதியைக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய இல்லறத்தை விட்டுச் செல்லத் தேவையில்லை. தந்தை கூறுகின்றார்: நீங்கள் வீட்டில் வசிக்கலாம், ஆனால் பழைய உலகம் அழிக்கப்பட உள்ளது என்ற நம்பிக்கையை உங்கள் புத்தி கொண்டிருக்குமாறு செய்யுங்கள். எங்களுடைய ஒரே தொடர்பு தந்தையுடனே ஆகும். ஒரு கல்பத்துக்கு முன்னர் இந்த ஞானத்தைப் பெற்றவர்கள் மாத்திரமே மீண்டும் அதைப் பெறுவார்கள் என நீங்களும் புரிந்து கொள்கின்றீர்கள். அனைத்தும் விநாடிக்கு விநாடி அதேபோன்று மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றது. ஆத்மாக்களாகிய உங்களில் இந்த ஞானம் உள்ளது, இல்லையா? தந்தையிடமும் இந்த ஞானம் உள்ளது. குழந்தைகளாகிய நீங்கள் தந்தையைப் போன்று ஆகவேண்டும். நீங்கள் கருத்துக்களையும் கிரகிக்க வேண்டும். கருத்துக்கள் அனைத்தும் ஒரேநேரத்தில் விளங்கப்படுத்தப் படுவதில்லை. விநாசம் உங்களின் முன்னால் நிற்கின்றது. இது அதே விநாசம் ஆகும். சத்திய, திரேதா யுகங்களில் எந்த விதமான யுத்தமும் இருக்க மாட்டாது. பல சமயங்கள் உருவாகி, சேனைகள் உருவாக்கப்படும் பொழுதே யுத்தம் ஆரம்பிக்கின்றது. முதலில் ஆத்மாக்கள் கீழே இறங்கும் பொழுது, சதோபிரதானாக இருக்கின்றார்கள், பின்னர் அவர்கள் சதோ, ரஜோ, தமோ ஸ்திதிகளினூடாகச் செல்கின்றார்கள். எவ்வாறு இந்த இராச்சியம் ஸ்தாபிக்கப்படுகின்றது என்பது உங்கள் புத்தியில் இருக்க வேண்டும். நீங்கள் இங்கே அமர்ந்திருக்கும் பொழுது சிவபாபா வந்து உங்களுடைய புத்தி கிரகிக்க வேண்டிய பொக்கிஷங்களைக் கொடுக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். நல்ல குழந்தைகள் குறிப்பெடுத்துக் கொள்கின்றார்கள். அவற்றை எழுதுவது நல்லது, பின்னர் தலைப்புக்கள் உங்கள் புத்தியில் வெளியாகும். இன்று, நான் இந்தத் தலைப்பைப் பற்றி விளங்கப்படுத்துவேன். தந்தை கூறுகின்றார்: நான் உங்களுக்குப் பல்வேறு பொக்கிஷங்களைக் கொடுத்தேன். நீங்கள் சத்திய, திரேதா யுகங்களில் அதிகளவு செல்வத்தைக் கொண்டிருந்தீர்கள். நீங்கள் பாவப் பாதைக்குச் செல்லும்பொழுது, அது குறைவடைந்தது. உங்கள் சந்தோஷமும் குறைவடைந்தது. நீங்கள் ஏதாவதொரு விகாரமான செயல்களைச் செய்யத் தொடங்கினீர்கள். நீங்கள் கீழே இறங்கியதால், உங்கள் சுவர்க்கக் கலைகளும் தொடர்ந்தும் குறைவடைந்தன. நீங்கள் சதோபிரதான், சதோ, ரஜோ, தமோ ஸ்திதிகளைக் கடந்து செல்கின்றீர்கள். நீங்கள் சதோ ஸ்திதியில் இருந்து ரஜோ ஸ்திதிக்குச் செல்லும் பொழுது, உடனடியாகவே அந்த ஸ்திதிக்குச் செல்வதில்லை; நீங்கள்

மிக மெதுவாகவே கீழே இறங்குகின்றீர்கள். தமோபிரதான் ஸ்திதியிலும் நீங்கள் ஏணியில் மிக மெதுவாகவே கீழே இறங்குகின்றீர்கள், உங்கள் கலைகளும் தொடர்ந்தும் குறைவடைகின்றன. நாளுக்கு நாள், அவை தொடர்ந்தும் குறைவடைகின்றன. நீங்கள் இப்பொழுது பாய்ந்து செல்ல வேண்டும். நீங்கள் தமோபிரதானில் இருந்து, சதோபிரதானாக வேண்டும். உங்களுக்கு இதற்கு நேரம் தேவை. மேலே ஏறுபவர்கள் சுவர்க்கம் எனும் அமிர்தத்தைச் சுவைக்கிறார்கள் என்று பாடப்பட்டுள்ளது. நீங்கள் காம விகாரத்தினால் அறையப்பட்டால், முற்றாக நொருங்கி விடுகிறீர்கள். உங்கள் எலும்புகள் முழுமையாக நொருங்கி விடுகின்றன. சில மனிதர்கள் தற்கொலை செய்கின்றார்கள். அது ஆத்மாவின் தற்கொலை என்று அழைக்கப்படுவதில்லை, வாழும் சரீரத்தின் தற்கொலை ஆகும். இங்கே, நீங்கள் உங்களின் ஆஸ்தியைத் தந்தையிடம் இருந்து பெற வேண்டும். நீங்கள் தந்தையை நினைவு செய்ய வேண்டும், ஏனெனில் அவரிடம் இருந்து நீங்கள் இராச்சியத்தைப் பெறுகின்றீர்கள். உங்களையே கேட்டுப் பாருங்கள்: நான் தந்தையின் நினைவில் நிலைத்திருப்பதால், எதிர்காலத்திற்காக எந்தளவு வருமானத்தைச் சேமித்துள்ளேன்? எந்தளவிற்கு நான் குருடர்களுக்குக் கைத்தடி ஆகியுள்ளேன்? இந்தப் பழைய உலகம் மாற வேண்டும் என்ற செய்தியை நீங்கள் வீட்டுக்கு வீடு சென்று கொடுக்க வேண்டும். தந்தை புதிய உலகிற்காக உங்களுக்கு இராஜயோகம் கற்பிக்கின்றார். ஏணிப்படத்தில் அனைத்துமே காட்டப்பட்டுள்ளது. இந்தப் படத்தை வடிவமைப்பது சிரமமானது. எவரும் இலகுவான முறையில் புரிந்து கொள்ளக்கூடிய அத்தகைய வழியில் எவ்வாறு ஏணிப் படத்தை வடிவமைக்கலாம் என்ற எண்ணங்களை நாள் முழுவதும் நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள். முழு உலகமும் இங்கு வரமாட்டாது; தேவ தர்மத்தவர்கள் மாத்திரமே வருவார்கள். உங்கள் சேவை நீண்ட காலத்திற்குத் தொடர வேண்டும். உங்களுடைய இந்த வகுப்பு எவ்வளவு காலம் தொடரும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் சக்கரத்தின் கால எல்லை நூறாயிரக்கணக்கான வருடங்கள் என்று நம்புகிறார்கள், ஆகவே அவர்கள் தொடர்ந்தும் சமயநூல்களை உரைக்கின்றார்கள். இறுதியில் அனைவருக்கும் சற்கதி அருள்பவர் வருவார் எனவும், தங்களுடைய சீடர்கள் சற்கதி பெறுவார்கள் எனவும், பின்னர் தாங்கள் ஒளியுடன் கலப்பார்கள் எனவும் அவர்கள் நம்புகின்றார்கள். எவ்வாறாயினும் அது அவ்வாறில்லை. நாங்கள் இப்பொழுது அமரத்துவமான தந்தையிடம் இருந்து உண்மையான அமரத்துவக் கதையைச் செவிமடுக்கின்றோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே நீங்கள் அமரத்துவமான தந்தை கூறுவதில் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர் கூறுகின்றார்: என்னை நினைவுசெய்து, தூய்மை ஆகுங்கள். இல்லையெனில் நீங்கள் பெருமளவு தண்டனையை அனுபவஞ் செய்ய வேண்டும்; நீங்கள் ஒரு தாழ்ந்த அந்தஸ்தையே பெறுவீர்கள். நீங்கள் சேவைக்காக முயற்சி செய்ய வேண்டும். ததீசி ரிஷியின் உதாரணமும் உள்ளது: அவர் தனது எலும்புகளையும் சேவையில் அர்ப்பணித்தார். சேவையில் உங்களின் எலும்புகளையும் அர்ப்பணிப்பது எனில், நாள் முழுவதும் உங்கள் சரீரத்தைப் பற்றி சிந்திக்காமல் சேவை செய்வதாகும். ஒன்று உங்கள் எலும்புகளால் செய்கின்ற பௌதீகச் சேவை, மற்றையது உங்கள் எலும்புகளால் செய்கின்ற ஆன்மீகச் சேவை. ஆன்மீகச் சேவையாளர்கள் இந்த ஆன்மீக ஞானத்தையே கூறுகிறார்கள். அவர்கள் செல்வத்தைத் தானஞ் செய்யும்பொழுது, தொடர்ந்தும் சந்தோஷத்தில் நடனம் ஆடுகிறார்கள். உலகிலுள்ள மக்கள் செய்கின்ற சேவைகள் அனைத்தும்

பௌதீகச் சேவையாகும். சமயநூல்களைக் கூறுவது ஆன்மீகச் சேவை என அழைக்கப்படுவதில்லை. தந்தையே வந்து ஆன்மீகச் சேவையைக் கற்பிக்கின்றார். ஆன்மீகத் தந்தை வந்து ஆன்மீகக் குழந்தைகளுக்குக் கற்பிக்கின்றார். குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது, புதிய சத்தியயுகத்து உலகிற்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்கின்றீர்கள். நீங்கள் அங்கே விகாரமான செயல்கள் எதையும் செய்ய மாட்டீர்கள். அது இராம இராச்சியம். அங்கு வெகு சிலரே இருக்கின்றார்கள். இந்நேரத்தில் இராவண இராச்சியத்தில் அனைவரும் துன்பத்தையே அனுபவஞ் செய்கின்றார்கள். இந்த ஞானம் அனைத்தும் உங்கள் புத்தியில் நீங்கள் செய்யும் முயற்சிகளுக்கேற்ப, வரிசைக்கிரமமாக உள்ளது. ஏணிப் படத்தில் இந்த ஞானத்தின் அனைத்தும் அடங்கியுள்ளது. தந்தை கூறுகின்றார்: உங்களுடைய இந்த இறுதிப் பிறவியில் தூய்மையாக இருங்கள், நீங்கள் தூய உலகின் அதிபதிகள் ஆகுவீர்கள். தாங்கள் சதோபிரதானில் இருந்து தமோபிரதானாகி விட்டதாகவும், மீண்டும் சதோபிரதான் ஆகுவதற்கான ஒரே வழி நினைவு யாத்திரையில் நிலைத்திருப்பதே எனவும் மனிதர்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் நீங்கள் விளங்கப்படுத்த வேண்டும். அவர்கள் இதைப் பார்க்கும் பொழுது, வேறு எவரிடமும் இந்த ஞானம் இல்லை என்பதை அவர்கள் புத்தி புரிந்து கொள்ளும். அவர்கள் ஏணிப் படத்தைப் பார்க்கும் பொழுது, ஏனைய சமயங்கள் பற்றிய தகவல்கள் எங்கே எனக் கேட்கின்றார்கள். அவை அனைத்தும் சக்கரத்தின் படத்திலே எழுதப்பட்டுள்ளது; அவர்கள் புதிய உலகிற்குள் செல்வதில்லை, அவர்கள் அமைதியைப் பெறுகின்றார்கள். பாரத மக்களே சுவர்க்கத்தில் இருந்தவர்கள். தந்தை இராஜயோகம் கற்பிப்பதற்குப் பாரதத்திற்கே வருகின்றார். அதனாலேயே அனைவரும் பாரதத்தின் புராதன யோகத்தை விரும்புகின்றார்கள். இந்தப் படங்களில் இருந்து புதிய உலகில் உண்மையில் பாரதம் மாத்திரமே இருந்தது என அவர்கள் புரிந்து கொள்வார்கள். அவர்கள் தங்களுடைய மதம் பற்றியும் புரிந்து கொள்வார்கள். கிறிஸ்து அந்த மதத்தை ஸ்தாபிப்பதற்கு வந்த பொழுதிலும், இந்நேரத்தில் அவரும் தமோபிரதானாகவே இருப்பார். படைப்பவரையும், படைப்பையும் பற்றிய இந்த ஞானம் மிகப்பரந்தது. எங்களுக்கு எவருடைய பணமும் தேவையில்லை என நீங்கள் அவர்களிடம் கூற முடியும். பணத்தை நாம் என்ன செய்வது? இதைச் செவிமடுத்து மற்றவர்களுக்கும் கூறுங்கள். இந்தப் படங்களை அச்சிடுங்கள். நீங்கள் இந்தப் படங்களையும் பயன்படுத்த வேண்டும். இந்த ஞானத்தைக் கூறக்கூடிய ஒரு மண்டபத்தை அமையுங்கள். பணத்தை ஏற்றுக்கொள்வதால் நாம் என்ன செய்ய முடியும்? இது உங்கள் இல்லறத்திற்கு நன்மை அளிக்கும். நீங்கள் ஆயத்தங்களைச் செய்ய வேண்டும். பலர் வந்து படைப்பையும், படைப்பவரையும் பற்றிய இந்த ஞானம் மிகவும் நல்லது எனக் கூறுவார்கள். இது மனிதர்களால் புரிந்து கொள்ளப்பட வேண்டும். வெளிநாடுகளில் இருக்கும் மக்கள் இந்த ஞானத்தைச் செவிமடுக்கும் பொழுது, இதை அதிகளவு விரும்புவார்கள்; அவர்கள் மிகவும் சந்தோஷம் அடைவார்கள். தங்களுடைய பாவங்களை அழிப்பதற்குத் தாங்களும் தந்தையுடன் யோகம் செய்ய வேண்டும் என அவர்கள் புரிந்து கொள்வார்கள். நீங்கள் தந்தையின் அறிமுகத்தை அனைவருக்கும் கொடுக்க வேண்டும். வேறு எவருமன்றி கடவுளாலேயே இந்த ஞானத்தைக் கொடுக்க முடியும் என அவர்கள் புரிந்து கொள்வார்கள். கடவுள் சுவர்க்கத்தை ஸ்தாபித்தார் என அவர்கள் கூறுகின்றார்கள், ஆனால் அவர் எவ்வாறு வருகின்றார் என அவர்கள் அறியாதுள்ளனர். உங்களைச்

செவிமடுப்பதில் அவர்கள் சந்தோஷம் அடைந்து யோகத்தைக் கற்பதற்கு முயற்சி செய்வார்கள். அவர்கள் தமோபிரதானில் இருந்து, சதோபிரதான் ஆகுவதற்கு முயற்சி செய்வார்கள். நீங்கள் சேவைக்காகப் பல எண்ணங்களைக் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் பாரதத்தில் உங்கள் திறமையை வெளிப்படுத்தினால் பாபா உங்களை வெளிநாட்டுக்கு அனுப்புவார்; ஒரு குழு (மிஷன்) செல்லும். தற்பொழுது, இன்னமும் சிறிது காலம் இருக்கின்றது. புதிய உலகம் ஸ்தாபிக்கப்படுவதற்கு அதிகக் காலம் எடுக்காது. எங்கே பூமியதிர்ச்சி இடம்பெற்றாலும், அவர்கள் இரண்டிலிருந்து மூன்று வருடங்களில் மீண்டும் புதிய கட்டடங்களைக் கட்டுகின்றார்கள். பல திறமையான வேலையாட்களும், அனைத்து மூலப்பொருட்களும் கிடைக்கும் பொழுது, அவற்றைக் கட்டுவதற்கு அதிகக் காலம் எடுக்காது. எவ்வாறு வெளிநாடுகளில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன? ஒரு விநாடியில் ஒரு மோட்டார்! எனவே சத்தியயுகத்தில் எவ்வளவு விரைவாகக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். பெருமளவு தங்கம், வெள்ளி போன்றவை அங்கே கிடைக்கும். நீங்கள் சுரங்கங்களில் இருந்து தங்கம், வெள்ளி வைரங்களைக் கொண்டு வருவீர்கள். நீங்கள் திறமைகள் அனைத்தையும் கற்கின்றீர்கள். தற்பொழுது விஞ்ஞானத்தின் அகங்காரம் அதிகளவு உள்ளது. விஞ்ஞானம் அங்கே பயன்படும். இங்கே அவர்கள் கற்றவை அனைத்தும், அங்கே அவர்களின் அடுத்த பிறவியிலும் பயன்படும். அந்நேரத்தில், முழு உலகமும் புதியதாகி விடுகின்றது. இராவண இராச்சியம் அழிக்கப்பட்டு விடும். பஞ்ச தத்துவங்களும் நியதிக்கேற்ப உங்களுக்குச் சேவை செய்யும். சுவர்க்கம் உருவாக்கப்படுகின்றது. அங்கு அனர்த்தங்கள் இடம்பெற மாட்டாது. அங்கே இராவண இராச்சியம் இருக்காது. அனைவரும் சதோபிரதான் ஆவர்கள். குழந்தைகளாகிய நீங்கள் தந்தையிடம் பெருமளவு அன்பு வைத்திருப்பதே மிகச்சிறந்த விடயமாகும். தந்தை உங்களுக்குக் கொடுக்கின்ற பொக்கிஷங்களைக் கிரகித்து, அதை மற்றவர்களுக்கும் தானஞ் செய்யுங்கள். நீங்கள் அதிகளவு தானஞ் செய்தால், அதிகளவு சேமித்துக் கொள்கிறீர்கள். நீங்கள் சேவை செய்யாது விட்டால் எவ்வாறு கிரகிப்பீர்கள்? உங்கள் புத்தியைச் சேவைக்குப் பயன்படுத்த வேண்டும். பெருமளவு சேவை செய்யப்பட முடியும். நாளுக்கு நாள், முன்னேற்றம் இருக்க வேண்டும். அத்துடன் சுய முன்னேற்றமும் இருக்க வேண்டும். அச்சா.

இனிமையிலும் இனிமையான அன்புக்குரிய எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. ஆன்மீகச் சேவை செய்வதில் சதா மும்முரமாக இருங்கள். இந்த ஞானச் செல்வத்தைத் தானஞ் செய்கின்ற பொழுது, சந்தோஷத்தில் நடனம் ஆடுங்கள். நீங்களும் இந்த ஞானத்தைக் கிரகிப்பதுடன், மற்றவர்களையும் அதைக் கிரகிக்கத் தூண்டுங்கள்.
2. தந்தை உங்களுக்குக் கொடுக்கின்ற இந்த ஞானப் பொக்கிஷங்களால் உங்கள் புத்தியை நிரப்புங்கள். நீங்கள் ஒரு தலைப்பில் விளங்கப்படுத்தக்கூடிய வகையில், குறிப்புக்களை எடுங்கள். இந்த ஞானச் செல்வத்தைத் தானஞ் செய்வதில் உற்சாகம் கொண்டிருங்கள்.

ஆசீர்வாதம்: அதிகார சொரூபமாக இருந்து, சத்தியத்தின் மகத்துவத்தினால் சதா சந்தோஷம் என்ற ஊஞ்சலில் ஆடுவீர்களாக.

அதிகாரத்தின் சொரூபமாக உள்ள குழந்தைகளின் புகழ்: சத்தியம் இருக்கும் இடத்தில் ஆத்மா நடனம் ஆடுகின்றார். சத்தியப்படகு ஆடும், ஆனால் அது தாழாது. ஒருவர் உங்களை எவ்வளவு அசைக்க நினைத்தாலும், நீங்கள் சத்தியத்தின் மகத்துவத்துடன் சந்தோஷ ஊஞ்சலில் மென்மேலும் ஆடுவீர்கள். அவர்கள் உங்களை அசைக்கவில்லை, நீங்கள் ஆடுவதற்காக, உங்கள் ஊஞ்சலைத் தள்ளுகிறார்கள். அவர்கள் உங்களை அசைக்கவில்லை, ஆனால் உங்களை ஊஞ்சலாடச் செய்கிறார்கள். ஆகையால் அவர்கள் உங்களை ஆடச் செய்து, தந்தையுடன் ஆடுவதற்கு உங்களுக்கு உதவுவதால் அவர்களுக்கு நன்றி கூறுங்கள்.

சுலோகம்: சகல சக்திகளினதும் ஒளியை சதா உங்களுடன் வைத்திருங்கள், மாயையினால் உங்களை நெருங்கி வர முடியாது.

**---ஓம் சாந்தி---**

அவ்யக்த சமிக்ஞை: ஒற்றுமை மற்றும் நம்பிக்கை என்ற சிறப்பியல்பால், வெற்றி நிறைந்தவர் ஆகுங்கள்.

உங்கள் எண்ணங்கள், வார்த்தைகள், செயல்களில், ஒற்றுமையையும் சுத்தத்தையும் தெளிவையும் இனிமையையும் மகத்துவத்தையும் கொண்டிருங்கள். இந்த ஐந்து விடயங்களும் ஒவ்வொருவரின் ஒவ்வோர் அடியிலும் புலப்படும் போது, தந்தையின் வெளிப்படுத்துகை விரைவில் இடம்பெறும். உங்கள் சம்ஸ்காரங்களில் புலப்படும் எந்தவொரு வித்தியாசமும் ஒற்றுமையாக மாற்றப்பட வேண்டும். ஒற்றுமைக்கு, ஒருவர் மற்றவரின் ஆலோசனைக்கு மதிப்பளியுங்கள். ஹா ஜி, ஹா ஜி எனக் கூறுங்கள். (ஆம் செய்கிறேன்). நிச்சயமாக உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவியுங்கள். அதன் பின்னர் ஒற்றுமை பந்தத்தினால் கட்டிக் கொள்ளுங்கள். இந்த ஒற்றுமையே வெற்றிக்கான வழிமுறை ஆகும்.